**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 117/2023 D.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுரேஷ் | த–பெ | சொக்கலிங்கம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 45/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | உதவி பேராசிரியர், தமிழ்துறை, அழகப்பா பல்கலைகழகம். | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.03.2025**

---

<u>05.03.2025</u>

**<u>முதல் விசாரணை :</u>**

1) 2022 ஜனவரி மாதத்திற்கு முன்பு 268 எ, பொன் நகர், காரைக்குடியில் வசித்து வந்ததற்கு ஆதாரமாக **எனது ஆதார் அட்டையை தாக்கல் செய்கிறேன். அது எ.சா.ஆ. 1 ஆகும். ( ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)** 2022 முதல் தற்போது வரை வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். முகவரி எண்.35/1, பாரதி நகர் 6 வது வீதி, அழகப்பாபுரம், காரைக்குடி அதற்கான **வீட்டு வாடகை ஒப்பந்த பத்திரம் நகல் எ.சா.ஆ. 2 ஆகும். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)** நான் தற்போது அழகப்பா பல்கலைகழத்தில் தமிழ்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு 90 சதவீதம் கண்பார்வை குறைபாடு உள்ளது **அதற்கு ஆதாரமாக மாற்றுதிறனாளி அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்கள் தாக்கல் செய்கிறேன். அது எ.சா.ஆ. 3 ஆகும். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).**

2) கண்பார்வை குறைபாடு உள்ளதால் மற்றவர் உதவி இல்லாமல் என்னால் படிக்க முடியாது. ஆவணங்களை எழுத முடியாது. மற்ற இடங்களுக்கு துணை இல்லாமல் செல்ல முடியாது. ஆனால் பழக்கப்பட்ட இடங்களுக்கு செல்லமுடியும். புகார்தாரரின் கணவர் செபஸ்டியான் என்ற கென்னடி எனக்கு நெடுங்காலமாக பழக்கம். அதனால் அவசர தேவைக்கா அவரிடம் ரூ. 10 ஆயிரம், 20 ஆயிரம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தேன். அதற்காக எனது மனைவி மூலம்

காசோலைகளை பூர்த்தி செய்து கொடுத்தேன். அதுபோல் காசோலைகளை கொடுப்பதும் வாங்குவதும் பழக்கம். அதுபோல் புகார்தாரரின் வீட்டிற்கு செல்லும்போது அவரது மனைவியை அறிமுகம் செய்து வைத்தார். 2022 மே மாதம் புகார்தாரரின் கணவர் இறந்துவிட்டார். அதன் பின்னர் கொடுக்கல் வாங்கல் இல்லாததால் நான் சென்று காசோலைகளை பெறவில்லை. கொடுக்கவேண்டிய பணத்தை கொடுத்துவிட்டேன்.

3) 2023 ஜூலை மாதம் நான் பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார். நான் சென்று கேட்டபோது தனது வழக்கறிஞரிடம் இருப்பதாகவும் காசோலையை வாங்கி தருவதாகவும் சொன்னார். என் மனைவி பொன் நகரில் மைக்ரோ பைனான்ஸ் என்ற கடை வைத்திருப்பதாக சொன்னார்கள் என் மனைவி கடை எதுவும் நடத்தவில்லை. ரயில்வே – கல்லூரி சாலையில் என் மனைவி ஜெராக்ஸ் கடை வைத்திருந்தார். தற்போது என் மனைவி பள்ளத்தூர் கல்லூரியில் தமிழ்துறையில் தற்காலிகமாக உதவி பேராசியராக பணிசெய்து வருகிறார். புகார்தாரரின் கணவரிடம் கொடுத்த காசோலையை புகார்தாரர் வழக்கிறிஞரிடம் இருந்து காசோலையை வாங்கி தருவதாக கூறினார் ஆனால் வாங்கி தரவில்லை. பழனியப்பன் எனக்கு உதவியாக என்னை அழைத்து சென்று வருவார்.

4) நான் அரசு ஊழியர் என்பதால் மேல் அதிகாரியின் அனுமதியின் பேரில்தான்நான் கடன் பெறமுடியும். தற்போது நான் ரூ. 1 லட்சத்திற்கு மேல் நான் ஊதியம் பெறுவதால் யாரிடமும் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. **எனது சம்பள பட்டியல் கணினி பதிவிறக்க நகல் எ.சா.ஆ.4 ஆகும். ( துறை அதிகாரியின் கையொப்பமும், முத்திரையும் இல்லை என்ற ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. )** என் மனைவி குட்ஷெட் தெருவில் கடை வைத்திருந்தார். புகார்தாரர் என் மீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. என்னை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))

விரைவு நீதிபதி காரைக்குடி